பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். 28.06.2022

**அன்புடையீர்,**

பரமக்குடி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நிகழும் திருவள்ளுவராண்டு ஜுன் மாதம் 30ம் தேதி (30.06.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.102, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.103, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.104, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் மே 2022 மற்றும் ஜீன் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.105, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்.5 | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் சேமநலநிதி சந்தா தொகைக்கான வட்டிமுன் மொழிவு 2013–2014 முதல் 2021 –2022 முடிய உள்ள காலத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு SHRI PRASATH ASSOCIATES என்ற முகவரிக்கு தொகை ரூ.2,28,600/– ஐ (V.Sathees kumar solutions) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலகக்குறிப்பு–**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.106, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

பொருள்.6

சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ன் கீழ் பரமக்குடி நகராட்சி பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பகத்தில் மேற்கூரை மற்றும் பேவர் பிளாக் தளம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்கள் அலுவலக ந.க.எண்.ஆர்.4/0672/2022 நாள்: 23.05.2022 ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில் மேற்கண்ட பணிக்கு 10.06.2022 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.V.கார்த்திகைச்சாமி<br>ஒப்பந்ததாரர், சத்திரக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.07 % குறைவு |
| 2 | திரு.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்<br>பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.93% அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு</u> –**

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% குறைவாக கொடுத்துள்ள திரு.V.கார்த்திகைச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.107, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.7

இந்நகராட்சி பராமரிப்பபில் உள்ள TN 65 W 9658 ஈப்பு வாகனம் பழுதடைந்து இயக்கமுடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்போது புதிய நகர்மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றுள்ள நிலையில் அவருக்கு ஈப்பு வாகனம் உபயோகத்திற்காக கொடுக்கப்பட வேண்டியிருப்பதால், இவ்வாகனத்தை பழுதுநீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகர்மன்றத் தலைவர் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும் அலுவல் பணிக்காக வெளியே சென்று வரவேண்டியிருப்பதாலும் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 21.04.2022 ந்தேதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. ரவி மோட்டார்ஸ், மதுரை | ரூ.85,100 |
| 2. | M/s. PMK மோட்டார்ஸ், பரமக்குடி | ரூ.78,950 |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/s.PMK மோட்டார்ஸ், பரமக்குடி என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஈப்பு வாகனத்தை பழுது நீக்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.108, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.8

இந்நகராட்சி பகுதியில் 15.04.2022 அன்று நடைபெற்ற சித்திரை திருவிழாவை முன்னிட்டு பரமக்குடி நகராட்சி சார்பில் நகர்மன்றத் தலைவர் அவர்களின் வேண்டுகோளின்படி சித்திரை திருவிழா வரவேற்பு செய்தி வெளியிட்டதற்கு கீழ்க்கண்ட நாளிதழில்களில் விளம்பரம் செய்தவகையில் கீழ்க்கண்ட நாளிதழ்களிலிருந்து கீழ்க்கண்ட விவரப்படி தொகைகள் வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | தினத்தந்தி | 18060.00 |
| 2. | தினமலர் | 19278.00 |
| 3. | தினகரன்<br>(தமிழ்முரசு) | 20160.00 |
| | **மொத்தம்** | **57498.00** |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக்குறிப்பு –</u><br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட தொகைகளை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>தீர்மானம் எண்.109, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.9</td><td>சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021-22 ன் கீழ் பரமக்குடி நகராட்சி வார்டு எண்.30 பொன்னையாபுரத்தில் பேருந்து பயணியர் நிழற்குடை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்கள் அலுவலக ந.க.எண்.ஆர்.4/0672/2022 நாள்:23.05.2022 ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதன் பேரில் மேற்கண்ட பணிக்கு 10.06.2022 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்<br>பரமக்குடி</td><td>மதிப்பீட்டை காட்டிலும்<br>0.14% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.V.கார்த்திகைச்சாமி<br>ஒப்பந்ததாரர், சத்திரக்குடி</td><td>மதிப்பீட்டை காட்டிலும்<br>0.24 % அதிகம்</td></tr>
</table><br>
<u>அலுவலக குறிப்பு-</u><br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14% குறைவாக கொடுத்துள்ள திரு.R.ஆறுமுகம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.110, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்.10</td><td>பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான மணிநகர் தோப்பு பகுதியில் உள்ள 3 எண்ணம் 8'' விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் வைகை ஆற்றுப்படுகையில் உள்.ள 2 எண்ணம் 8'' விட்டமுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் உள்ள மோட்டார்கள், கேபிள்கள், பேனர் போர்டுகள் மற்றும் HSPEHOSE ஆகியவை பழுதடைந்துள்ளது. இதனால் மேற்படி ஆழ்குழாய் கிணறுகள் பயன்படுத்த முடியாமலும், பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கஇயலாமலும் உள்ளது. மேலும் சுந்தர்ராஜபட்டினம் மற்றும் எழில்நகர், ஆகிய பகுதிகளில் உள்ள விரிவாக்க பகுதிகளுக்கு குடீநீர் தேவை அவசியமாக இருப்பதால் குடிநீர் விநியோகிக்க குழாய்கள் பதிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி பகுதி பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசிய தேவையை கருத்தில் கொண்டு உடனடியாக சரிசெய்ய நகர்மன்ற தலைவர் அவர்கள் நேரடி ஆய்வில் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் 8'' விட்டமுள்ள 5 எண்ணம் ஆழ்குழாய் கிணறுகளை சுத்தம் செய்யவும் மோட்டார் பேனர்போர்டுகள் பழுதுநீக்கம் செய்யவும், புதிய மோட்டார்கள் பொருத்தவும், மற்றும் சுந்தர்ராஜபட்டிணம் எழில்நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்க குழாய்கள் பதிப்பதற்கும், தயார்செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்படி குடிநீர் விநியோகப் பணியின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இப்பணிக்கு 27.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றன.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு.P.கோவிந்தன்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>மதிப்பீட்டை காட்டிலும்<br>0.90 % அதிகம</td></tr>
<tr><td>2</td><td>திரு.A.திருப்பதி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>மதிப்பீட்டை காட்டிலும்<br>0.20 % குறைவு</td></tr>
</table><br>
மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.20 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.A.திருப்பதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u></td></tr>
</table>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.111, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

பொருள்.11

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்தும் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய மன்றத்தின் முன் அனுமதி பெற்று 23.06.2022 ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | M/s M.S. Man Power Agencey, Paramakudi. | 0.02% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | M/s Exsernet, Madurai. | 0.87% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு**</u> –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Man Power Agencey, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும் குடிநீர் பராமரிப்பின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றம் எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், 01.06.2022 முதல் ஆறு மாத காலத்திற்கு பணியாளர்கள் விநியோகம் செய்யக்கோரி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.112, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

பொருள்.12

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பு செய்ய தேவையான பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்தும் பணிக்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய மன்றத்தின் முன் அனுமதி பெற்று 23.06.2022 ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | M/s M.S. Man Power Agencey, Paramakudi. | 0.02% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | M/s Exsernet, Madurai. | 0.87% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

<u>**அலுவலகக்குறிப்பு**</u> –

1.மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s Man Power Agencey, Paramakudi கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

2.மேலும் தெருவிளக்கு பராமரிப்பின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்றம் எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், 01.06.2022 முதல் ஆறு மாத காலத்திற்கு பணியாளர்கள் விநியோகம் செய்யக்கோரி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.113, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

பொருள்.13

நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் இதர பிற தேவைகளுக்காக சுமார் 168 எண்ணம் சிறுமின் விசைப் பம்புகளுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் அன்றாட அதிக அளவு பயன்பாடு மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு சிறுவிசைப் பம்புகளின் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது, பேனல்போர்டு பழுது, சின்டெக்ஸ் தொட்டி பழுது உட்பட ஏனைய மோட்டார் மற்றும் வயரிங் பழுதுகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே வார்டு எண் 1 முதல் 18 வரையுள்ள வார்டுகளில் உள்ள சிறு மின்விசைப் பம்புகளில் ஏற்படும்

பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது கோடைகாலமாக இருப்பதால் மேற்கண்ட சிறுமின்விசைப்பம்புகளின் அவசிய பயன்பாட்டின் காரணமாக மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 24.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.S.சந்திரன்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.24% குறைவு |
| 2 | திரு.M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>1.10% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள ( மதிப்பீட்டைக் காட்டிலும் 0.24% குறைவு) திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.114, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.14

நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்களின் இதர பிற தேவைகளுக்காக சுமார் 168 எண்ணம் சிறுமின் விசைப் பம்புகளுடன் கூடிய சின்டெக்ஸ் தொட்டிகள் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் அன்றாடம் மற்றும் அதிக அளவு பயன்பாடு காலநிலைக்கு ஏற்றவாறு சிறுவிசைப் பம்புகளின் அவ்வப்போது ஏற்படும் மோட்டார் பழுது, பேனல்போர்டு பழுது, சின்டெக்ஸ் தொட்டி பழுது உட்பட ஏனைய மோட்டார் மற்றும் வயரிங் பழுதுகளை சரி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே வார்டு எண் 19 முதல் 36 வரையுள்ள வார்டுகளில் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது கோடைகாலமாக இருப்பதால் மேற்கண்ட சிறுமின்விசைப்பம்புகளின் அவசிய பயன்பாட்டின் காரணமாக மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 24.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.20% குறைவு |
| 2 | திரு.S.சந்திரன்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>1.73 % அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள ( மதிப்பீட்டைக் காட்டிலும் 0.20% குறைவு) திரு.M.சங்கர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.115, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.15**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களை கொண்டு குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் வழியாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் குழாய்களில் ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாகவும், கனரக போக்குவரத்தின் காரணமாகவும், மின்கம்பங்கள் ஊண்டுதல் மற்றும் கண்ணாடி இழை கேபிள்கள் பதிக்கும் போதும், குழாய்களில் வெடிப்புகள் மற்றும் உடைப்புகள் ஏற்படுகின்றது.

மேலும் ஒரு சில குழாய்களில் உள்ளே வேர் உள்ளிருந்து அடைப்புகள் ஏற்படுகின்றன. எனவே குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரும்பொருட்டு 25.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.A.திருப்பதி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.20% குறைவு |
| 2 | திரு.M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.40% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள ( மதிப்பீட்டைக் காட்டிலும் 0.20% குறைவு) திரு.A.திருப்பதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.116, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.16**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தலைமை நீரேற்றும் நிலையங்கள் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மூலம் குடிநீர் நீரேற்றம் செய்து அன்றாடம் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நீரேற்றம் செய்யும் போது மோட்டார்களில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு தினசரி குடிநீர் வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே பொமக்களின் குடிநீர் விநியோக அவசியம் கருதி நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் மற்றும் இதர பிரதான குழாய்கள் மற்றும் மின் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது உடனடியாக சீர் செய்தால்தான் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலும். எனவே மேற்கண்ட பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரும்பொருட்டு 25.05.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | | |
|---|---|---|
| 1 | திரு.A.திருப்பதி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.15% குறைவு |
| 2 | திரு.M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.30% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள ( மதிப்பீட்டைக் காட்டிலும்

% குறைவு) திரு.A.திருப்பதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணியை குடிநீர் விநியோக நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.117, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**பொருள்.17**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முதுகுளத்தூர் ரோடு மேம்பாலம் மற்றும் உயர்கோபுர மின்விளக்குகளை பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.98 நாள்: 31.05.2022 ல் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு ஒப்பந்த பணிகளை 23.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ குப்தா எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங், 4/229 ஆஸ்பத்திரி சாலை, பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும் 0.10% அதிகம் |
| 2 | குருநாத் எண்டர்பிரைசஸ் 4/413A4 சோமநாதபுரம் பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும் 0.05 % குறைவு |

**<u>அலுவலககுறிப்பு-</u>**

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பநதபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவாக கொடுத்துள்ள குருநாத் எண்டர்பிரைசஸ், பரமக்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.118, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**பொருள்.18**

பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திருமதி.கமலம் க/பெ.நாராயணன், என்பவர் வழக்கு எண். OS எண்.43/2022, I.A எண் 92/2022, திருமதி.அமலி என்பவர் வழக்கு எண். OS எண்.44/2022, I.A எண் 95/2022, திரு,அருளாந்து சாமி, என்பவர் வழக்கு எண். OS எண்.45/2022, I.A எண் 98/2022 மற்றும் பிச்சையம்மாள் & மோகன் என்பவர்கள் வழக்கு எண். OS எண்.27/2022, I.A எண் 57/2022 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பரமக்குடியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா இடம் நகராட்சிக்கு சொந்தமானது இல்லை. பொதுப்பணித்துறைக்கு சொந்தமானதாகும். மேற்படி புலத்தில் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு பொதுப்பணித்துறையின் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் இளங்கோவன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும் மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு—</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.119, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**பொருள்.19**

பரமக்குடி நகராட்சிப் பகுதியில் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் ஸ்ரீ சுந்தர்ராஜபெருமாள் கோவில் சார்பாக கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் வெகுவிமர்சியாக நடைபெறும். அதுசமயம் வைகையாற்றில் ஒருவார காலத்திற்கு பல்வேறு மண்டப பணிகள் அமைத்து திருவிழா நடைபெறும் இதனால் மேற்படி திருவிழாவிற்கு முன்னதாக வைகையாற்றில் நகராட்சி மூலம் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும். கொரானா பெருந்தொற்றின் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக மேற்காணும் சித்திரை திருவிழா வைபவம் தடைபெற்றுவிட்டதால் வைகையாற்றில் அளவுக்கு அதிகமாக கருவேலமரங்கள், முட்புதர்கள், செடிகொடிகள் மற்றும் நாணல்கள் ஆகியவை உயரமாக வளர்ந்து மணற்பரப்பு தெரியாத அளவிற்கு காடுபோல்

காட்சியளித்தது. இதுதொடர்பாக நகர்மன்றத் தலைவர் ஆணையாளர் மற்றும் பொறியாளர், சுகாதார ஆய்வாளர் ஆகியோருடன் வைகையாற்றில் நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி வைகையாற்றில் வளர்ந்துள்ள கருவேலமரங்கள், செடிகொடிகள், முட்புதர்களை ஜேசிபி மற்றும் கிட்டாச்சி இயந்திரங்கள் மூலம் போர்க்கால அடிப்படையில் அகற்றி பராம்பரிய திருவிழா நடைபெறுவதற்கு உரிய வழிவகை செய்து கொடுக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தியதன் பேரில் மேற்படி பணியினை மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.7.20 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்படி சித்திரை திருவிழா வைபவம் நடைபெற குறைந்த தினங்களே இருந்ததால் மேற்படி திருவிழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணியை நகராட்சி சட்டம் எண்.1920 பிரிவு எண்: 15-ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு.வி.கார்த்திகைச்சாமி ஒப்பந்ததாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும், அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட சித்திரைத் திருவிழாவின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணியை நகராட்சி சட்டம் எண்.1920 பிரிவு எண்: 15-ன் கீழ் இந்நகராட்சியில் பதிவுபெற்ற திரு.வி.கார்த்திகைச்சாமி ஒப்பந்ததாரர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.120, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.20

NUHM-2021-22 ன் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் பரமக்குடி அரசினர் மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் அரசு நகர்நல மையக்கட்டிடம் கட்டும் பணிக்கு (மன்ற தீர்மான எண்.85 நாள்: 31.05.2022) 30.05.2022 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளுக்கு தொழில்நுட்ப தகுதிகள் அடங்கி உள்ள 31.05.2022 அன்று பிரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளுக்கும் விலைப்பட்டியல் அடங்கிய உறை (Price Bid) 06.06.2022 அன்று பிரிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.M.சங்கர்<br>ஒப்பந்ததாரர், சத்திரக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>4.94 % அதிகம் |
| 2 | திரு.S.சந்திரன்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி | மதிப்பீட்டை காட்டிலும்<br>0.04% குறைவு |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும்பொருட்டு மேற்படி பணியானது திட்டப் பணியாக இருப்பதாலும் பணியினை உரிய காலத்திற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பணியை விரைவாக உரிய காலத்திற்குள் முடிககும் பொருட்டு மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.S.சந்திரன் ஒப்பந்ததாரருக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.121, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்.21

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-2021-22 ன் கீழ் கிறிஸ்த்துவ காலணி ஊரணியை

| | |
|---|---|
| | தூர்வாரி சுத்தப்படுத்தும் பணிக்கு மக்கள் தொடர்பு அலுவலர் இராமநாதபுரம் அவர்கள் அலுவலக வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்த வகையில் மக்கள் குரல் நாளிதழிலிருந்து ரூ.16,934/- ஐ வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி ரூ.16,934/-ஐ மக்கள் குரல் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.122, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்.**